காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ் ஏற்பாட்டில் கண்டோன்மெண்ட், மோத்தி பார்க் கிரவுண்டில் நடைபெற்ற மாபெரும் ஹாக்கி போட்டியை குறு, சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகளை வழங்கினார்கள். அருகில் நகரச் செயலாளர் டி.பாபு, மண்டல குழுத் தலைவர் என்.சந்திரன், பகுதிச் செயலாளர் பி.குணாளன் உள்ளனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (30.10.2023), திரைப்பட இயக்குநர் விக்ரமன் இல்லத்திற்கு நேரடியாக சென்று, விக்ரமனின் துணைவியாருக்கு தனியார் மருத்துவ மனையில் அளிக்கப்பட்ட தவறான சிகிச்சையின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு மருத்துவக் குழுவினருடன் நேரில் சந்தித்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கும் பணிகளை மேற்கொண்டார். இந்நிகழ்வில் அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. பாலாஜி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி மற்றும் மருத்துவ குழுவினர் உடனிருந்தனர்.

முதல்வர் அறிவுரையேற்று - மருத்துவக் குழுவோடு வீட்டுக்குச் சென்றார், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்!

முதல்வருக்கும், அமைச்சர் மா.சுப்பிரமணியனுக்கும் - இயக்குநர் விக்ரமன் நன்றி!

விக்ரமனின் துணைவியாருக்கு - வீட்டிலேயே சிகிச்சை அளிக்க ஏற்பாடு!

சென்னை, அக்.31-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (30.10.2023), திரைப்பட இயக்குநர் விக்ரமனின் இல்லத்திற்கு நேரடியாக சென்று, விக்ரமனின் துணைவி யாருக்கு தனியார் மருத்துவமனையில் அளிக்கப்பட்ட தவறான சிகிச்சையின் காரணமாக உடல் நலம் பாதிக்கப்பட்டு இருப்பதை அரசு மருத்துவக் குழுவினருடன் நேரில் சந்தித்து, அவர்களுக்கு உரிய சிகிச்சை வழங்கும் பணிகளை மேற்கொண்டார்.

இயக்குநர் விக்ரமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

எனது மனைவி 5 வருடகாலமாக உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். அவரது முதுகில் தவறான அறுவை சிகிச்சை செய்யப்பட்டதன் காரணமாக நடக்க முடியாமல் போனது. இது தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தேன். அதனைப் பார்த்த முதலமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் இது தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தார். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் 15க்கும் மேற்பட்ட சிறப்பு மருத்துவர்களுடன் எனது இல்லத்திற்கு வந்து, எனது மனைவியை பரிசோதனை செய்துள்ளார்கள். இப்படி உடனடி நடவடிக்கை எடுத்த முதலமைச்சர் அவர்களுக்கும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எனது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றி.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது :

முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தலின்படி, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருடன், உயர் மருத்துவக் குழுவினர் பரிசோதனை செய்ததில் விக்ரமன் அவர்கள் துணைவியாருக்கு நரம்பியல் ரீதியாக (Neurology) அவரது சக்தி 3/5 என்று உள்ளது. இது ஒரு நல்ல நிலை தான், எனவே இவருக்கு பிசியோதெரபி சிகிச்சையின் மூலம், உடற் பயிற்சி செய்வதன் மூலம் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்படும். இவருக்கும் சர்க்கரை (Diabetis), உயர் இரத்த அழுத்தம் (Hypertension) ஆகியவை கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே விக்ரமனின் துணைவியார் அவர்கள் வீட்டில் இருந்தபடியே உரிய பயிற்சிகள் மற்றும் சிகிச்சைகள் எடுத்துக்கொள்வதன் மூலம் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு, குணமடையும் வாய்ப்புகள் உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

தாம்பரம் மாநகரக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், அக்.31-

தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்கள், இன்று (31.10.2023 - செவ்வாய்க் கிழமை), காலை 10 மணியளவில் பல்லாவரம் துரைபாக்கம், 200 அடி ரேடியல் சாலையில் கேபிடள் லேண்ட் டெக்னோ பார்க் தனியார் தொழிற்நிறுவனத்தை திறந்து வைக்க வருகை தருகிறார்கள். தலைவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கும் வகையில் பல்லாவரம், ரேடியல் சாலை மேம்பாலம் அருகில் மாநகரக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இராயபுரம் கிழக்குப் பகுதியில் - 'நீட்' விலக்கு கையெழுத்து இயக்கம்!

இரா.செந்தில்குமார் தலைமை ! தா.இளையஅருணா- ஐட்ரீம்ஸ் மூர்த்தி முன்னிலை!

சென்னை அக்:31

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி சார்பில் எழை எளிய கல்வி தகுதி நிராகரிக்கும் நீட் எதிர்த்து இந்திய குடியரசு தலைவர் அவர்களுக்கு நீட் தேர்வுக்கு எதிராக கையெழுத்து நீட் விலக்கு நம் இலக்கு எனும் நிகழ்ச்சியை இராயபுரம் கிழக்கு பகுதிச் செயலாளர் இரா.செந்தில்குமார் ஏற்பாட்டில் 51வது வட்டத்தில் (30.10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணயளவில் சஞ்சீவிராயன் கோவில் தெருவில் நடைபெற்றது.

சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஐட்ரீம்ஸ் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் தா.ஜெயபாலன், பி.சேகர்,கு.சுந்தர், லோ.மோகன்,வட்ட செயலாளர் காட்டன் ஜி.சதீஸ்குமார், எஸ்.குமார்,எஸ்.சுரேஷ், அத்தோ பி.முனுசாமி, ஐ.சி.எப்.பழனி, வி.குமார்,என்.பாரி, கே.நாட்டாமை, யு.அனிபா, கே.எஸ்.குமார், கே.மணிகண்டன், தா.ரவி, க.சுரேஷ், ஜி.உமாபதி, பி.எஸ்.நாராயணன், எம்.எம்.சந்துரு, வி.சரவணன்,டி.நந்து, ஜி.ஆறுமுகம், கே.கவியரசு, கே.சசி, டி.பெருமாள், எஸ்.சம்பத், எம்.வல்லவராஜ் , இரா.முரு கன், டி.பார்த்தசாரதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ் நன்றி கூறினார்.

சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அண்ணா நகர் சட்டமன்ற தொகுதியின் பாக முகவர்கள் கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. இதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி, எம்.கே. மோகன் எம்.எல்.ஏ. மற்றும் பகுதி கழக செயலாளர்கள் ந.ராமலிங்கம், ச.பரமசிவம், தொகுதி பொறுப்பாளர்கள் கவிஞர் காசி முத்துமாணிக்கம்,மாவட்ட நிர்வாகிகள் து. விக்டர் ஆர்.என்.துரை, வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, அகஸ்டின் பாபு, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் ஐ. கென்னடி,வட்டக் கழக செயலாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், பாக முகவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

தலைமைச் செயலகத்தில், நேற்று (30.10.2023) வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் வேளாண்மை – உழவர் நலத்துறை திட்டங்கள் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் செல்வி. அபூர்வா, வேளாண்மைத் துறை ஆணையர் முனைவர். எல்.சுப்ரமணியன், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் ஆர். பிருந்தா தேவி, வேளாண்மை கூடுதல் இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங், தலைமைப் பொறியாளர் (வே.பொ.) ஆர். முருகேசன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார். கூட்டத்திற்கு கோ.ஏகப்பன் தலைமை தாங்கினார். மேயர் பிரியாராஜன், சட்டமன்றஉறுப்பினர்கள்:ப.தாயகம்கவி, அ.வெற்றிஅழகன், ஜோசப்சாமுவேல், முன்னாள்சட்டமன்றஉறுப்பினர் ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே..மூர்த்தி, கே.சந்துரு, எம்.விஜயகுமார் மற்றும் பரிதிஇளம்சுருதி, எம்.பி.எம்.ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்:தேவஜவஹர், இசட் ஆசாத், ஜி.மகாதேவன், புனிதவதிஎத்திராஜன், தேர்தல்பொறுப்பாளர்கள்:பி.டி.சி.செல்வராஜ், கௌதமன், இரா.விடுதலை,.யாழினி.பகுதிக்கழகசெயலாளர்கள்செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக்கண்ணு, கூ.பி.ஜெயின், வே.வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன்,டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர். நாகராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி. மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

திருவள்ளூர் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் - பாகப் பொறுப்பாளர்கள் பங்கேற்று - கூட்டம் சிறப்புற நடைபெற உறுதியேற்போம்!

சென்னை கிழக்கு மாவட்டத்தினர் - வாக்காளர் சேர்ப்பில் தீவிரமாக ஈடுபடுவோம்!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற - மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, அக். 31 -

திருவள்ளூரில் நடைபெறும் வடக்கு மண்டல பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி பாகப் பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்று, அக்கூட்டம் சிறப்புற நடைபெற உறுதியேற்போம். எனவும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தினர் - வாக்காளர் சேர்த்தல், திருத்தல் பணிகளில் தீவிரமாக ஈடுபடுவது என்றும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகக் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாக, மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

அதன் விபரம் வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழச் செயலாளர்கள், வட்ட கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று (30.10.2023 திங்கள்கிழமை) சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மஹாலில், அவைத் தலைவர் கோ.ஏகப்பன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் பி.கே.சேகர்பாபு சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகர மேயர் ஆர்.பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள்: ப. தாயகம் கவி, அ. வெற்றி அழகன், ஜோசப்சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்: ப.ரங்கநாதன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, எம்.விஜயகுமார் மற்றும் பரிதி இளம்சுருதி, எம்.பி.எம். ஷேக்அப்துல்லா, மாவட்ட நிர்வாகிகள்: தேவஜவஹர், இசட் ஆசாத், ஜி.மகாதேவன், புனிதவதி எத்திராஜன், தேர்தல் பொறுப்பாளர்கள்: பி.டி.சி. செல்வராஜ், கௌதமன், இரா. விடுதலை, டாக்டர் யாழினி. பகுதிக் கழக செயலாளர்கள்: செ.தமிழ்வேந்தன், எம்.சாமிக் கண்ணு, கூ.பி.ஜெயின், வே. வாசு, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், டி.எஸ்.பி. ராஜ கோபால், எம்.டி.ஆர். நாக ராஜ், சொ.வேலு. வி.சுதாகர், எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி. பொதுக்குழு உறுப்பினர்கள்: கோ.மணி, பி.ஜெ.துளசிங்கம், சாவித்திரி வீரராகவன், நிர்மலா தேவி, பி.உதயசங்கர், வி.ரமேஷ் (எ) நீலகண்டன், ஆர்.கலைச்செல்வி, ஏ.பி.பூர்ணிமா, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள்: டி.லோகேஷ், பாலமுருகன், ஜெகதீஷ், க.வினோத், ஜி.ஜே.பிரபு, ஆர்.தனசேகர், ஆர்.டி.சங்கர் நானா, எல்.பி.எப். மோகன், ஜி.தாமோதரன், எம்.பிரோஸ்கான், பி.விஜய்குமார், துரைக் கண்ணன், மா.அசோக்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, ராஜா முகம்மது, பிரதீப்குமார், து. ஆயிரம், சுதாதீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், டாக்டர். ஜி.சாந்தகுமாரி, ஜி.வி.நாக வள்ளி பிரபாகரன் மற்றும் வட்டகழகச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர். வட்டக் கழக செயலாளர் மா.ருத்ரமூர்த்தி நன்றி கூறினார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு நிதிபற்றாகுறை பெரும் அளவில் இருந்தும் அதையெல்லாம் சமாளித்து, மக்கள் நலத்தை பேணுகின்ற திட்டங்களான காலை உணவுத்திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம், மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண்திட்டம் ஆகிய பெரும் பொருட்செலவு வைக்கக்கூடிய திட்டங்களை எப்படி செயல்படுத்துகிறீர்கள் என்று "ஈ.டி.வி. பாரத்தின்" நெறியாளர் கேட்ட கேள்விகளுக்கு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அளித்த பதில்கள் மற்ற மாநில மக்களும் அறிந்து கொள்வது அவசியம் என்ற எண்ணத்தில் நாட்டில் பெரும் பான்மையாகப் பேசப்படும் மொழிகளான தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, கன்னடா, மலையாளம், இந்தி, ஒடியா, அஸ்ஸாமிஸ், குஜராத்தி, பெங்காலி, உருது, மராத்தி, பஞ்சாபி ஆகிய 13 மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிட்ட ஈடிவி பாரத் தொலைக்காட்சிக்கு நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

பூலித்தேவர், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், வேலுநாச்சியார், வீரன் அழகு முத்துகோன், தீரன் சின்னமலை, மகாகவி பாரதியார், கப்பலோட்டிய தமிழர் வ.உசி, கொடிகாத்த திருப்பூர் குமரன் போன்ற எண்ணற்ற தியாகிகளை என்றென்றும் மதித்து போற்றுகின்ற தமிழ்நாட்டில் குறிப்பாக கடந்த குடியரசு தின அணிவகுப்பில் நாட்டின் சுதந்திரத்திற்காக போராடிய மேற்சொன்ன தியாகிகளின் வரலாற்றை சித்தரிக்கும் ஊர்திகளை புறக்கணித்த போது, அந்த ஊர்திகளை தமிழ்நாடு முழுவதும் பயணிக்க வைத்து, விடுதலை வீரர்களுக்கு புகழ்சேர்த்த தமிழ்நாட்டில்.. இருக்கின்ற ஒருவர் இந்திய நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட தமிழர்களின் வரலாற்றை தேடிப் பார்த்தும், எதுவுமே கிடைக்கவில்லை, தமிழ்நாடு அரசு தியாகிகளை மறந்துவிட்டது என பேசியதற்கு

"நஞ்சு தோய்ந்த எண்ணங்களுக்கு நயமாகப் பேசும் திடீர் குபீர் நாட்டுப் பற்றாளர்களின் வரலாற்றை தேசச்தந்தை காந்தியடிகளின் இறுதி நாட்கள் சொல்லும். "இந்த கோட்சே கூட்டத்தின் நடிப்பு சுதேசிகளை நாடறியும்" என்று வலைதளத்தில் பதிவிட்டு, தோலுரித்த தலைவர் தமிழ்நாடு முதலமைச்சரை வழிமொழிந்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

வருகிற 5.11.2023 ஞாயிற்றுக்கிழமையன்று திருவள்ளூரில், முதல்வர், கழகத்தலைவர் தலைமையில் நடைபெறும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) பாசறைக் கூட்டத்திற்கு சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், வில்லிவாக்கம், அம்பத்தூர், திரு.வி.க.நகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் அடங்கியுள்ள 13 பகுதிகளில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) அனைவரையும் காலை 8.30 மணிக்கெல்லாம் திருவள்ளூரில் நடைபெறும் பயிற்சிப் பாசறைக்கூட்டத்தில் பங்கேற்க வைத்து கூட்டத்தை சிறப்பிக்க உறுதியேற்று இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றியது.

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2023ஐ தகுதி ஏற்படுத்தும் நாளாகக் கொண்டு, வாக்காளர் பட்டியல் சுருக்கமுறை திருத்தம் செய்யும் பணிகளுக்காக அக்டோபர் 27ந்தேதி வெளியிட்ட வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் முழுமூச்சாக ஈடுபடுவதென்றும், தொடர்ந்து 4.11.23, 5.11.23, 18.11.23, 19.11.23 ஆகிய 4 நாட்களில் நடைபெறும் சிறப்பு முகாமில் புதிய வாக்காளர்களைச் சேர்க்கும் பணியிலும், இறந்த - இடம் மாறிய வாக்காளர்களை நீக்கும் பணியிலும் மும்முரமாக ஈடுபடவும் முடிவெடுத்து இக்கூட்டம் தீர்மானம் நிறைவேறியது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி , மதுரை – பில்லர் அரங்கில் பள்ளிக் கல்வித்துறை சார்பாக தலைமையாசிரியர்களுக்கான தலைமைப்பண்புப் பயிற்சியைத் தொடங்கி வைத்து தலைமையாசிரியர்களுக்கான கையேட்டினையும் வெளியிட்டார். இந்நிகழ்வில் பள்ளிக் கல்வித்துறை இயக்குநர் முனைவர் க.அறிவொளி கலந்து கொண்டார்.